# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.30/ந/2026, நாள் 14.08.2026

பா. தினேஷ்,
விருத்தாசலம், கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
விருத்தாசலம், கடலூர். – எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், புதுகுப்பம், D.M. ஸ்கூல் தெற்கு புறம், கதவு எண். 464/A3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. தினேஷ் என்பவரது 24.11.2025 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2025 அன்று பெறப்பட்டு 30/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், புதுகுப்பம், D.M. ஸ்கூல் தெற்கு புறம், கதவு எண். 464/A3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. தினேஷ், என்பவரின் 24.11.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"விருத்தாசலம் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர், பொது சாலை ஆக்கிரமிப்பை அகற்ற போட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாமல், விருத்தாசலம் நகராட்சி அதிகாரிகள் அலைகழிக்கிறார்கள். விருத்தாசலம் நகராட்சி அதிகாரிகள் ஏதோ உள்நோக்கத்துடன் செயல்படுவதாக தெரிகிறது. எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விருத்தாசலம் நகராட்சியில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரியை உடனடியாக இந்த பொது பாதை ஆக்கிரமிப்பை அகற்ற உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.".

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் விருத்தாசலம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. விருத்தாசலம் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 03.06.2026 அன்று ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேலும் மேற்படி விசாரணையின் போது உரிய ஆவணங்கள் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராக நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

5. இந்நிலையில், எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையர், தனது கடிதம் ந.க.எண்.4869/2025/எப்1, நாள் 15.05.2026–ல் மனுதாரரின்குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம், அவர்களின் கடிதம் ந.க.எண். 1/3246/2024, நாள் 14.10.2025ல் விருத்தாசலம் நகரம், கண்டியங்குப்பம் வார்டு-D, பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4)-ல்

திரு. N. ராஜேஷ்குமார் அவர்களால் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

விருத்தாசலம் நகராட்சி அலுவலக அறிவிப்பு ந.க.எண். 4869/2025/எப்1, நாள் 10.12.2025–ல், மேற்படி சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டது.

திரு. N. ராஜேஷ்குமார், த/பெ. நடராஜன், புதுக்குப்பம், விருத்தாசலம் என்பவரின் கடிதம் நாள் 15.12.2025ல் விருத்தாசலம் நகரம், வார்டு D பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4)ல் சுமார் 21177 ச.மீ. இடத்தினை கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், அதற்கு தனது பெயரில் பட்டா உள்ளதாகவும், தாங்கள் ஆக்கிரமிப்பு அகற்ற கோரும் அறிவிப்பினை திரும்ப பெறுமாறும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, நகரசார் ஆய்வரின் குறிப்பு கோரப்பட்டதில், நகரசார் ஆய்வாளர், விருத்தாசலம் நகராட்சி குறிப்பு நாள் 18.12.2025ல் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பில் உள்ள இடம் வார்டு – D பிளாக், 12. நகரளவை எண். 7/17, (பழைய புல எண். 63.4)ல் 203.00 ச.மீ. இடம் ராஜசேகரன் மகன் இளம்பரிதி என்பவர் பெயரில் பட்டாவாக தற்போது கணினியில் உள்ளது எனவும், ராஜேஷ்குமார் என்பவர் மேற்படி பட்டாவில் உள்ள நபருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் 0.5.0 சென்ட்க்கு அனுபவம் மற்றும் உட்பிரிவு வரைப்படத்தின்படி 0.5.0 சென்ட் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

வருவாய் வட்டாட்சியரின் கடிதத்தில் திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2, சதுரடி இடத்தை கிரைய ஆவண நான்கெல்லைப்படி மட்டுமே அனுபவம் செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2, சதுரடி (203.00 ச.மீ) இடம் அனுபவம் மற்றும் பட்டா உட்பிரிவின்படி பட்டதாரர் பெயரில் உள்ளது என தெரியவருகிறது.

நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்ற இயலாது. எனவே, மேற்படி சாலை என குறிப்பிடும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4869/2025/எப்1, நாள் 22.12.2025ன் மூலம் வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் விவரம் மனுதாரர் திரு. தினேஷ் என்பவருக்கும் நகல் அனுப்பப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'.

6. மனுதாரர் 03.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையர், தனது கடிதம் ந.க.எண். 4869/2025/எப்1, நாள் 02.06.2026–ல் 03.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு விருத்தாசலம் நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. கே.செல்வம் என்பவரை ஆஜராக அனுமதித்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. கே.செல்வம் என்பவர் 03.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"விருத்தாசலம் நகர், கண்டியங்குப்பம், வார்டு D, பிளாக் 12, நகரளவை எண்.7/17 (பழைய புல எண்.63/4ல்) திரு. N. ராஜேஷ்குமார் என்பவரால் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் கடிதம் ந.க.எண்.1/3246/2024 நாள் 14.10.2025ன் வழி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

விருத்தாசலம், புதுக்குப்பத்தைச் சேர்ந்த திரு. N. ராஜேஷ்குமார் என்பவர் தனது 15.12.2025 நாளிட்ட கடிதத்தில் விருத்தாசலம் நகரம் வார்டு D, பிளாக் 12, நகரளவை எண்.7/17, (பழைய புல எண்.63/4–ல்) சுமார் 21177ச.மீ. இடத்தினை 04.07.2017 அன்று கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், அதற்கு தனது பெயரில் பட்டா உள்ளதாகவும், ஆக்கிரமிப்பு அகற்ற கோரும் அறிவிப்பினை திரும்ப பெறுமாறும் தெரிவித்துள்ளார்.

நகரசார் ஆய்வாளரின் குறிப்பின்படி, மேற்படி திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2 சதுர அடி (203.00 ச.மீ.) இடம் அனுபவம் மற்றும் பட்டா உட்பிரிவின்படி பட்டாதாரர் பெயரில் உள்ளது. இந்நிலையில்

நகரசார் ஆய்வாளரின் குறிப்பின்படி மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்ற இயலாது. எனவே மேற்படி “சாலை” என குறிப்பிடப்படும் இடத்தில் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என 22.12.2025 நாளிட்ட கடிதத்தில் வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் நகல் மனுதாரர் திரு.பா.தினேஷ் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விருத்தாசலம் வட்டாட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு துரிதமாக மேல்நடவடிக்கை எடுத்து மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு அறிக்கை ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”.

8. மனுதாரர் தனது 03.06.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில், தொழில் காரணமாக வெளிநாட்டு பயணம் மேற்கொண்டிருப்பதால் 03.06.2026 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியவில்லை என தெரிவித்து, விசாரணைக்கான தேதியை மாற்றி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

9. மனுதாரரின் கோரிக்கையை ஏற்று மனுதாரரை 18.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறும், இதற்குபிறகு வேறு வாய்ப்பு வழங்க இயலாது என்ற விவரத்தினை தெரிவித்தும், எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையருக்கு நகலிட்டு, மனுதாரருக்கு முகவரியிடப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் 05.06.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

10. மனுதாரர் 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“விருத்தாசலம் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் பொது சாலை ஆக்கிரமிப்பை அகற்ற வழங்கிய உத்தரவினை நடைமுறைப்படுத்தாமல், விருத்தாசலம் நகராட்சி அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர். விருத்தாசலம் நகராட்சி அதிகாரிகள் ஏதோ உள்நோக்கத்துடன் செயல்படுகின்றனர்.

- 2006ம் ஆண்டு திரு. நடராசன் என்பவர் 2511 சதுர அடி திரு.பாலாஜி என்பவருக்கு, 20 அடி அகலப்பாதைக்கு வடக்கு என்று கிரையம் செய்து கொடுத்துள்ளார்.
- 2010ம் ஆண்டு திரு. நடராசன் என்பவர் தனது தாய் மற்றும் சகோதரிகளிடம் மீதமுள்ள 9 1/2 செண்ட் கிரையம் பெற்றுள்ளார்.
- 2011ம் ஆண்டு அதே திரு. நடராசன் 9 1/2 செண்ட் + பாதையும் சேர்த்து 10 1/2 செண்ட் ஆக்கி சமமாக பிரித்து இரண்டு மனைகளாக விற்பனை செய்துள்ளார்.
- 2017ம் ஆண்டு திரு. ராஜேஷ்குமார் என்பவர் மேற்படி இடத்திற்கு (5 1/4 செண்ட்) பட்டா வாங்கி பொதுப்பாதையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளார்.
- கடந்த 2023ம் ஆண்டு மேற்படி பொதுப்பாதை அகற்றும் தொடர்பாக எனது தந்தை திரு. பாலகிருஷ்ணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.25502 of 2023 என்ற வழக்கு தொடரப்பட்டு, தீர்ப்புரையில் எட்டு வாரத்திற்குள் மேற்படி புகார் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் எந்தவித நடவடிக்கையும் இதுநாள் வரை எடுக்கப்படவில்லை.
- 2025ம் ஆண்டு கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் மேற்படி பொதுப்பாதையை அகற்ற உத்தவிட்டுள்ளனர்.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், விருத்தாசலம் நகரரட்சியின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவிட வேண்டுமாறும், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்கள் மேற்படி பொதுப்பாதைக்கான பட்டாவினை உடனடியாக ரத்து செய்ய உத்தரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.”.

11. மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கு எண். W.P.No.25502 of 2023ல் 30.08.2023 நாளிட்ட தீர்ப்பின் விவரம் பின்வருமாறு:

“2. xxxx xxxx

3. xxxx xxxx

4. In view of the limited relief sought herein, which has not been seriously opposed on the side of the respondent authorities, this court without going into the merits of the case, directs the respondent authorities to consider the petitioner's representation dated 30.07.2023, and pass appropriate orders, on merits and in accordance with law, after affording an opportunity of hearing to all the parties concerned, within a period of eight weeks from the date of receipt of a copy of this order.

5. With the aforesaid direction, this writ petition stands disposed of. No costs". –என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

12. எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையர் சார்பில் ஏற்கனவே வாக்குமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

13. விருத்தாசலம் நகராட்சி ஆணையர், வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களுக்கு முகவரியிடப்பட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்டுள்ள தனது கடிதம் ந.க.எண். 4869/2025/எப்1, நாள் 08.06.2026–ல் கீழ்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

“திரு. B. தினேஷ், த/பெ. பாலகிருஷ்ணன், புதுக்குப்பம், விருத்தாசலம் என்பவரின் கடிதம் நாள் 07.10.2025ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுவில் திரு. B. தினேஷ் என்பவரின் புகார் மனு மீது இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள், புகார் மனு தொடர்பாக தங்களது வாதத்தை எழுத்துப்பூர்வ அறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களையும் சேர்த்து சமர்ப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. புகார் மனு தொடர்பாக கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம், அவர்களின் கடிதம் ந.க.எண். 1/3246/2024, நாள் 14.10.2025ல் விருத்தாசலம் நகரம் கண்டியங்குப்பம் வார்டு-D, பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4)-ல் திரு. N. ராஜேஷ்குமார் அவர்களால் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வேலி அமைத்து ஆக்கிரமைப்பு செய்துள்ளதை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

விருத்தாசலம் நகராட்சி அலுவலக அறிவிப்பு ந.க.எண். 4869/2025/எப்1, நாள் 10.12.2025ல் மேற்படி சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டது.

திரு. N. ராஜேஷ்குமார் த/பெ, நடராஜன், புதுக்குப்பம், விருத்தாசலம் என்பவரின் கடிதம் நாள் 15.12.2025–ல் விருத்தாசலம் நகரம், வார்டு-D, பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4)-ல் சுமார் 211.77 ச.மீ. இடத்தினை கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், அதற்கு தனது பெயரில் பட்டா உள்ளதாகவும், தாங்கள் ஆக்கிரமிப்பு அகற்ற கோரும் அறிவிப்பினை திரும்ப பெறுமாறும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, நகரசார் ஆய்வரின் குறிப்பு கோரப்பட்டதில் நகரசார் ஆய்வாளர், விருத்தாசலம், நகராட்சி குறிப்பு நாள் 18.12.2025ல் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பில் உள்ள இடம் வார்டு-D, பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4)-ல் 203.00 ச.மீ. இடம் ராஜசேகரன் மகன் இளம்பரிதி என்பவர் பெயரில் பட்டாவாக தற்போது கணினியில் உள்ளது எனவும், ராஜேஷ்குமார் என்பவர் மேற்படி பட்டாவில் உள்ள நபருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் 0.5.0 சென்ட்டுக்கு அனுபவம் மற்றும் உட்பிரிவு வரைபடத்தின்படி 0.5.0 சென்ட் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

வருவாய் வட்டாட்சியரின் கடிதத்தில் திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2, சதுரடி இடத்தை கிரைய ஆவண நான்கெல்லைப்படி மட்டுமே அனுபவம் செய்யமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2 சதுரடி (203.00 ச.மீ) இடம் அனுபவம் மற்றும் பட்டா உட்பிரிவின்படி பட்டாதாரர் பெயரில் உள்ளது என தெரியவருகிறது.

நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்ற இயலாது. எனவே, மேற்படி சாலை என குறிப்பிடும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே

ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என விருத்தாசலம் நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண். 4869/2025/எப்1, நாள் 22.12.2025 மூலம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணை மு.ம. எண்.30/ந/2026-ன்படி முறைமன்ற நடுவத்தில் 03.06.2026 அன்று நேரில் ஆஜராகி சாலை என குறிப்பிடப்படும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக மாண்பமை முறைமன்ற நடுவம் விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு துரித மேல் நடவடிக்கை எடுத்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமைப்பு அகற்ற இயலாது என்பதால் மேற்படி சாலை என குறிப்பிடும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நவடிக்கை எடுக்க இயலும் என்பதால் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் விபரம் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.". எனத் தெரிவித்துள்ளார்.

14. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, விருத்தாசலம் நகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

திரு. நடராசன் என்பவரால் 20 அடி அகலப்பாதைக்கு வடக்கு என்று 2511 சதுர அடி இடத்தை திரு. பாலாஜி என்பவருக்கு 2006ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதும், திரு. நடராசன் என்பவர் தனது தாய் மற்றும் சகோதரிகளிடம் மீதமுள்ள 9 1/2 செண்ட் இடத்தை 2010ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார் என்பதும், திரு. நடராசன் 9 1/2 செண்ட் + பாதையும் சேர்த்து 10 1/2 செண்ட் ஆக்கி சமமாக பிரித்து இரண்டு மனைகளாக 2011ம் ஆண்டு விற்பனை செய்துள்ளார் என்பதும், திரு. ராஜேஷ்குமார் என்பவர் மேற்படி இடத்திற்கு (5 1/4 செண்ட்) 2017ம் ஆண்டு பட்டா வாங்கி பொதுப்பாதையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளார் என்பதும், பொதுப்பாதை அகற்றுவது தொடர்பாக மனுதாரரின் தந்தை திரு. பாலகிருஷ்ணன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.25502 of 2023 தொடர்ந்துள்ளார் என்பதும், மேற்படி வழக்கின் 30.08.2023 நாளிட்ட தீர்ப்பின் மீது நகராட்சி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், 2025ம் ஆண்டு கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் மேற்படி பொதுப்பாதையை அகற்ற உத்தவிட்டுள்ளனர் என்பதும், பொதுப்பாதைக்கான பட்டாவினை ரத்து செய்து ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

விருத்தாசலம் நகர், கண்டியங்குப்பம், வார்டு D, பிளாக் 12, நகரளவை எண்.7/17 (பழைய புல எண்.63/4ல்) திரு. N. ராஜேஷ்குமார் என்பவரால் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி மனைபிரிவில் உள்ள பொதுப்பாதைக்கான இடத்தை நகராட்சி வசம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், இதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்புதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், திரு. N. ராஜேஷ்குமார் என்பவரால் மேற்படி சுமார் 211.77 ச.மீ. இடம் கிரையம் பெற்று, பட்டா தனது பெயரில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்ற கோரும் அறிவிப்பினை திரும்ப பெற 15.12.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார் என்பதும், இது குறித்து நகரசார் ஆய்வரின் 18.12.2025 நாளிட்ட குறிப்பில் வார்டு-D, பிளாக் 12, நகரளவை எண். 7/17 (பழைய புல எண். 63/4B)-ல் 00203.00 ச.மீ. ராஜசேகரன் மகன் இளம்பரிதி என்பவர் பெயரில் பட்டாவாக கணினியில் உள்ளது என்பதும், ராஜேஷ்குமார் என்பவர் மேற்படி பட்டாவில் உள்ளவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்பதும், வருவாய் வட்டாட்சியரின் கடிதத்தில் திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2, சதுரடி இடத்தை கிரைய ஆவண நான்கெல்லைப்படி மட்டுமே அனுபவம் செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, திரு. N. ராஜேஷ்குமார் கிரையம் பெற்ற 2279 1/2, சதுரடி (203.00 ச.மீ) இடம் அனுபவம் மற்றும் பட்டா உட்பிரிவின்படி பட்டதாரர் பெயரில் உள்ளது என்பதும், நகரசார் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்ற இயலாது என்பதால் மேற்படி சாலை என குறிப்பிடும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என்ற விவரம் வருவாய் வட்டாட்சியர், விருத்தாசலம் அவர்களுக்கு நகராட்சி 22.12.2025 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு, மனுதாரருக்கு நகலிடப்பட்டுள்ளது என்பதும், புகாருக்குள்ளான

இடம் பட்டாதாரர் பெயரில் உள்ளதால் ஆக்கிரமைப்பு அகற்ற இயலாது என்பதால் மேற்படி சாலை என குறிப்பிடும் இடத்தின் பட்டாவினை ரத்து செய்தால் மட்டுமே ஆக்கிரமிப்பாக கருதி நடவடிக்கை எடுக்க இயலும் என்பதால் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் விபரம் வழங்குமாறு விருத்தாசலம் வட்டாட்சியரை கேட்டுக்கொண்டுள்ளார் என்பதும் எதிர்மனுதாரரான விருத்தாசலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கு எண். W.P.No.25502 of 2023 ல் (1) மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம், (2) வட்டாட்சியர், விருத்தாசலம் வட்டம், (3) விருத்தாசலம் நகராட்சி ஆணையர் மற்றும் (4) சரவணகுமார், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் ஆகியோரை பிரதிவாதியாக கொண்ட வழக்கில் வழங்கப்பட்ட 30.08.2023 நாளிட்ட தீர்ப்பில் அனைத்துத் தரப்பினருக்கும் தங்கள் தரப்பு விளக்கத்தை அளிக்க வாய்ப்பளித்த பிறகு மனுதாரரின் கோரிக்கை மனுவை பரிசீலித்து, சட்டத்திற்கு உட்பட்டும், வழக்கின் தன்மையின் அடிப்படையிலும் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட ஆணையினை நிறைவேற்றும்வண்ணம், வருவாய் துறையுடன் இணைந்து நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு, அதன் அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்திட விருத்தாசலம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. பா. தினேஷ்,
   த/பெ. ரா. பாலகிருஷ்ணன்,
   464/A3, D.M. School தெற்கு புறம்,
   புதுக்குப்பம், விருத்தாசலம்,
   கடலூர் மாவட்டம்-606001.
2. நகராட்சி ஆணையர்,
   விருத்தாசலம்,
   கடலூர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

நகல் – மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர். 19/8/26